**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பாசனம் - தூத்துக்குடி மாவட்டம் - சாத்தான்குளம் வட்டம் - சடையநேரி கால்வாயை அகலப்படுத்தி, புத்தன்தருவை வரை நீட்டிக்கும் பணிக்கு ரூ.1435 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்து அரசாணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (என்.2) துறை**

அரசாணை (நிலை) எண்.214
நாள்: 30.5.2003.

படிக்கவும்

1. அரசாணை (நிலை) எண். 513, பொ.ப.து., நாள் 27.10.1999

2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, மதுரை மண்டலம் கடிதம் எண். 2987/97/டீகூஐ/உபொ2/நாள் 17.9.2002.

3. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, மதுரை மண்டலம் கடிதம் எண். 17937/97/உபொ2/ டீகூஐ/நாள் 30.9.2002.

4. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, மதுரை மண்டலம் கடிதம் எண். 17937/97/உபொ2/ டீகூஐ/நாள் 5.12.2002.

---------

ஆணை:

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டத்தில் சடையநேரி கால்வாயை அகலப்படுத்தி, புத்தன்தருவை வரை நீட்டிக்கும் பணிக்கு ரூ.1233 இலட்சத்திற்கு அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய காரணங்களால் திட்ட மதிப்பீடு உயர்ந்ததால் முழுப்பணிக்கும் ரூ.1435 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு மதுரை மண்டல நீர்வள ஆதார அமைப்பின் தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(1) வரைபடம் மாற்றம் - ரூ. 71.00 இலட்சங்கள்

(2) நிலம் கையகப்படுத்துவதில் செலவு உயர்வு - ரூ. 9.00 இலட்சங்கள்

(3) பணியில் புதிதாக சேர்க்கப்பட்ட இனங்கள் - ரூ. 122.00 இலட்சங்கள்

மொத்தம் - ரூ. 202.00 இலட்சங்கள்

3. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டத்தில் சடையநேரி கால்வாயை அகலப்படுத்தி, புத்தன்தருவை வரை நீட்டிக்கும் பணிக்கு ஏற்கனவே நிர்வாக ஒப்புதல் வழங்கிய ரூ.1233 இலட்சத்திற்கு பதிலாக ரூ.1435 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு நீர்வள ஆதார அமைப்பின் மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார். இத்திட்டம் தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கடன் நிதியுதவி மூலம் செயல்படுத்தப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் காணும் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டத்தில் சடையநேரி கால்வாயை அகலப்படுத்தி, புத்தன்தருவை வரை நீட்டிக்கும் பணிக்கு ஏற்கனவே நிர்வாக ஒப்புதல் வழங்கிய ரூ.1233 இலட்சத்திற்கு பதிலாக ரூ.1435 இலட்சத்திற்கு (ரூபாய் ஆயிரத்து நானூற்றி முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு (Revised Administrative Sanction) அளிக்க அரசு கருதி அவ்வாறே ஆணையிடுகின்றது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு அளித்துள்ள திருத்திய மதிப்பீட்டிற்கான செலவினங்களை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கலாம்

"4701 பெரிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் குறித்னஅமைளைவசயவளைந ளுயஉேவடிே ) அளிக்க அரசு கருதி அவ்வாறே ஆணையிடுகின்றது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு அளித்துள்ள திருத்திய மதிப்பீட்டிற்கான செலவினங்களை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கலாம்

"4701 பெரிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு - 03. நடுத்தரப் பாசனம் - வணிகத் தன்மை வாய்ந்தது - 302. சடையனேரி வாய்க்காலை அகலப்படுத்துதலும், விரிவுபடுத்துதலும் - பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம் - JA. சடையனேரி வாய்க்கால் அகலப்படுத்துதலும் விரிவுபடுத்துதலும் - 16. பெரும் பணிகள் (த.தொ.கு. 4701 03 302JA 1609) ".

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள திருத்திய மதிப்பீட்டிற்கான செலவினம் ஒரு புதிய துணைப் பணித் திட்டமாகும். (New Instrument of Service) இச்செலவினத்திற்கான சட்டமன்றத்தின் ஒப்புதல் உரிய நேரத்தில் பெறப்படும். இதனை எதிர்நோக்கி இச் செலவினம் முதலில் எதிர்பாராத செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான மொத்தச் செலவில் இவ்வாண்டிற்கான செலவு மற்றும் தேவையான விவரங்கள் அடங்கிய உரிய விண்ணப்பத்தினை நிதி (வ.செ.1) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 க்கு அனுப்புமாறு பொதுப்பணித்துறை நீர்வள

ஆதார அமைப்பு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறை இசைவுடன் வெளியிடப்படுகிறது. அ.சா.கு. எண்.270/DS/VNP/, நாள் 28.5.2003 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 121.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்
அரசு செயலாளர்.

பெறுநர்

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சேப்பாக்கம், சென்னை-5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, மதுரை மண்டலம்,
மதுரை-2.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதார
அமைப்பு, சேப்பாக்கம், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-35/18.
மாவட்ட ஆட்சித் தலைவர்,தூத்துக்குடி.
கருவூல அலுவலர், தூத்துக்குடி.

நகல்

நிதி (பொ.ப.து 11) துறை, சென்னை-9.
நிதி (வரவு செலவு) துறை, சென்னை-9.
உதிரி/இ.கோ.

/ஆணைப்படி அனுப்பப்படுகின்றது/

பிரிவு அலுவலர்.